


பாஸ்கர் புரொடக்ஷன்ஸ்

# இல்லறமே இன்பம்

தமிழ்

டைரக்ஷன்.... பாஸ்கர்ராவ்

BALU BROS

# இல்லறமே இன்பம்

## (கதைச் சுருக்கம்)

வயது முதிர்ந்த கோவிந்தராவ், ஒரு மோட்டார் கம்பெனி முதலாளி. அவருக்கு மூத்த மனைவி மூலம் மோகன் என்னும் மகனும், இளைய மனைவி சாந்தம்மாவின் மூலம் ஆனந்த் என்னும் மகனும் சீதா என்னும் மகளும் இருக்கிறார்கள். இளைய மனைவி சாந்தம்மா பேராசை கொண்டவள். சொத்துக்கள் அனைத்தையும் தன் மகன் ஆனந்தனே அடையவேண்டும் என்ற கருத்துள்ளவள். இதற்கேற்றாற் போல், வெளியூரிலே படித்து வருகிறான் மோகன்.

உடல் நலனில்லாதிருந்த கோவிந்தராவ், தனது முதல் மகனான மோகனுக்கு ஒரு கடிதம் எழுதுகிறார். அதை சாமர்த்தியமாக தடுத்து விடுகிறாள் சாந்தம்மா! பிறகு, கோவிந்தராவ், டாக்டர் மூலம் தந்தி கொடுக்கிறார் மகனை வரும்படி!

தந்தியைக் கண்ட மோகன் விரைகிறான். ஆனால் விதி சதிசெய்துவிட்டது. வரும் வழியிலே, குண்டர்களால் தாக்கப்படும் ஒரு வயோதிகரையும், வனிதை சாவித்திரியையும் காண்கிறான். ஓடினான் உதவ. ஆனால் படுகாயம் அடைந்தான். காயம் அடைந்த அவன் கண் விழித்துப் பார்க்கும்போது, தான் உதவ எண்ணிய மனிதர்களே தன்னை ஆஸ்பத்திரியில் சேர்த்திருக்கிறார்கள் என்று அறிந்தான்.

மோகன் வருகையை அவன் கொடுத்த தந்தி மூலம் அறிந்த சாந்தம்மா சூழ்ச்சி செய்கிறாள். இதற்கு துணையாக, ஆனந்தின் நண்பனும் அடுத்துக் கெடுப்பதில் நிபுணனுமான தயாநிதி சேருகிறான். அவன் உதவி கொண்டு, கம்பெனி சம்பந்தப்பட்டவை என பொய் சொல்லி



சொத்துக்களை ஆனந்தன் பேருக்கு எழுதி, கோவிந்தராவினிடம் கை எழுத்து வாங்கிவிடுகிறாள் சாந்தம்மா. பிறகு கோவிந்தராவ் காலமாகிவிடுகிறார்.

குணமடைந்த மோகன், வீட்டை அடைகிறான். தந்தை இறந்த செய்தி கேட்டு தவித்தான். சிற்றன்னையின் சீற்றம் அவனை வாட்டியது. பாசம் கொண்ட தம்பியின் வேண்டுகோள், சிற்றன்னையின் கோபத்துக்கு முன் பதுங்கிவிட்டது. வீட்டைவிட்டு வெளியேறினான். அவனுக்கு ஆதரவு தந்தனர், விபத்தில்உதவிய சாவித்திரியும், அவள் தந்தையும். ஆனால் அங்கேயும் அவன் நிம்மதியாக இருக்க முடியவில்லை. காரணம் அவனது சகோதரன் ஆனந்தின் செய்கைகள் தான். ஏற்கனவே மணமாகி, மனைவி லலிதாவுடன் இல்லற வாழ்க்கை நடத்திவந்த ஆனந்தனை, தயாநிதி, வேறு வழியில் திருப்பினான். மேனகா என்னும் நாட்டியக் காரியை அறிமுகப்படுத்தி வைத்தான். குடிப்பழக்கமும் செய்து வைத்தான். இதன் பலன் ஆனந்தன் வீட்டுக்கு ஒழுங்காக வருவதை மறந்தான். அன்புடன் நடததிய மனைவியை அடிக்கடி கோபித்தான். அமைதி நிறைந்த அவர்கள் வாழ்க்கையிலே சூறுவளி வீசத் தொடங்கியது.

தாய், தன் வாழ்வுக்கு இடைஞ்சலாக இருப்பதை அறிந்து, தயாநிதி உதவி கொண்டு, அவளை புண்ணிய இடங்களுக்கு கடவுள் தரிசனம் செய்துவர அனுப்பி விடுகிறான். தன்னை எச்சரிக்கை செய்த, தன் சகோதரி சீதாவின் கணவனும், தனது தாய் மாமனுமான பீதாம்பரத்துடன் சண்டையிட்டு, தங்கையையும் அவள் கணவனையும் வீட்டைவிட்டு துரத்தி விடுகிறான்.

மேனகாவின் மோகத்தில் ஈடுபட்டு, தனது அன்பு மனைவியை துன்புறுத்திவந்தான். இந்தச் செய்தி அறிந்த மோகன், தன் தம்பியை திருத்தும் நோக்கத்துடனும், செய்திகள் தெரிந்துகொள்ளும் பொருட்டும், மேனகாவின் வீட்டிலேயே செவிட்டு டிரைவராக சேர்ந்து உளவறிகிறான்.

மனமிடிந்த லலிதா, சாவித்திரி உதவிகொண்டு மேனகா வீட்டுக்கு வருகிருள். அங்கே அவமானம் அடைகிருள். அடிபடுகிருள். மாறு வேஷத்திலிருந்த மோகன், தம்பிக்கு அறிவு புகட்டுகிருன். உண்மை வெளிப் படுகிறது. ஆனுலும் மேனகாவின் மேல் கொண்ட மோகத்தை மறக்கவில்லே. சாந்தம்மா, தனது மகனின் கெட்ட செய்கைகளுக்காக, அவனே கண்டிக்கிருள். தாயை அடித்து விடுகிருன். மனம் குமுறி வீட்டைவிட்டுச் செல்கிருள் சாந்தம்மா. தான் கேடு நினைத்ததை அவள் உணர்கிருள். திரும்புகிருள் வீட்டுக்கு! வழியிலேயே ஒரு கார் மோதிவிட்டுச் செல்கிறது. பெற்ற மகனின் கார்தான் அது. தற்செயலாக சிறிது தூரத்திலிருந்த மோகன் காப்பாற்று கிருன். ரத்ததானமும் செய்கிருன். மகனிடம் மன்னிப்புக் கேட்கிருள். தான் செய்த தவறுகளே உணர்ந்தாள். மோகன் அவள் தவறுகளே மறந்து தாயாகவே கருதினுன்.

பணம் பறிப்பதையே குறியாகக் கொண்ட மேனகா வின் தாய் காந்தம்மா, நாட்கள் பல ஆனவுடன் ஆனந்தனே திட்ட ஆரம்பிக்கிருள். மேனகா கபட நாடகம் ஆடுகிருள். தயாநிதியுடன் சதியாலோசனே செய்து ஒரு சூழ்ச்சி செய் கிருள். இதை அறிந்த லலிதா, போலீஸாரால் கைது செய்யப்படப்போகும் ஆனந்தனேக் காப்பாற்றுகிருள். உண்மை வெளிப்படுகிறது. கேடு நினேத்த தயாநிதி தப்பிச் செல்கிருன். மேனகாவையே கொலே செய்கிருன் பணத் துக்காக. தன் மோசவலேயில் சாவித்திரியை சிக்கவைக் கிருன். இவைகளே எல்லாம் அறிந்த மோகன் சண்டாளர் களே, சதிக் கூட்டத்தை, ஒழிக்க கங்கணம் கொண்டு விரைகிருன்!—என்ன ஆயிற்று என்பதை வெள்ளித்திரை விளக்கும்.





# இல்லறமே இன்பம்

## பாடல்கள்

இயற்றியவர் : **தஞ்சை ராமையாதாஸ்**

பாடியவர் : **பி. லீலா**

### லலிதா

நான் மறவேனே முரளி—நான் மறவேன் முரளி
கண்ணு சேவடி தனையே— (நான்)
மதுர மதுர மிகும் நின் முரளி
உலவிடுந் தென்றலே இசை முரளி
கானத்தை இன்புற அருள்நீ—கண்ணு காவியக்கலையே
(நான்)
மனதால் பூஜித்தேன் திருவே மாமறை—
புகழுதே அமுத கானத்தின் மாயையால்
மலர் மணமாகிட, மனக்குறை தீர்ந்திட
அருள்புரி மாதவ கண்ணு
(நான்)

இயற்றியவர் : **எஸ். எம். ஸந்தானம்**

பாடியவர் : **சீர்காழி கோவிந்தராஜன்**
**ராணி**

### பீதாம்பரம் & சீதா



பீதா : பிரேமா-பிரேமா—பிரேமா
சிதா : ராமா—ராமா—ராமா.
பீதா : ஏழுஜென்மம் எடுத்தேனே—
இங்கே ஏங்கியழுது பாதி செத்தேனே
மொதல் ஜென்மத்திலே
மஜ்னுநானே...ஏ...
லைலா—லைலா—லைலா...லைலா...



ஸலா ஸலா என்று
பிராணன் விட்டேனே
வழியிலே பிராணன் விட்டேனே
சீதா: என்னது? அதுவும்நீதானு?
கோரம்-கோரம் மகா கோரம்
பீதா: கேளு பின்னே
வேறே ஜென்மத்தில் சலீமு(ம்)
நானே-ஏ...ஏ...
அனர்-அனர்.. அனர்...
அனர்-அனர் என்று சமாதிமீது அழுதேனே
உன் சமாதிமீது அழுதேனே
சீதா: ஆமா! ஆமா! அழுதேன்னுங்க-கேட்டேன்
பீதா: அதுதானு-இன்னும் உண்டு.
சென்ற ஜென்மத்திலோ, தேவதாஸ் நான்...
பாரு-பாரு-பாரு-
பாரு! பாரு! என்று மாண்டுவிட்டேனே நான்
மாண்டு விட்டேனே
சீதா: மாண்டு விட்டாயா? மீண்டும் மாண்டு விட்டாயா?
அப்பப்ப எனக்கு சகிக்கலே இனி
பீதா: ஏழு ஜென்மத்திலே பிரியசகி நீயே
காப்பாற்றணும் என்னை இனி என் கண்ணே
பலன் தராதோ இவ்விரகம்-அடையேனே நான்
இனி மரணம்
சீதா: பலிச்சது-பலிச்சது-மரணம் பலிச்சது
பீதா: ஆ!



சீதா: நம் கதையாரோ எழுதிடுவாங்க
-பிலிம் கதையாக
எடுத்திடுவாங்க
மக்களெல்லாரும் கண்டிடுவாங்க
'ஹண்ட்ரட்த்டே'தினம்
செய்திடுவாங்க.
பிரேமையைவிட மரணம் நல்லது-
நல்லது-நல்லது அதே நல்லதோய்
பீதா. பிரேமா! பிரேமா! பிரேமா!
சீதா: ராமா-ராமா-ராமா.-

இயற்றியவர் : பாடியவர்
தஞ்சை ராமையாதாஸ் பி. லீலா



## லலிதா

யோகமும்—அனுராகமும்
தியாகமும் ஒரு யாகமே
உருவாகினல் துயர் போகுமே
ஒரு ஜோதியின் சுடரே வீசவும்
இரு கண்களும் பிரேமையில் பேசவும்
கானமுதும், மலர் தேனமுதும்
இன்ப வானமுதும், பொங்கி பாயவும்
கனிந்திடு(ம்) இரவினில் தேடுதே
மனதே உனே மகிழ்வுடன் நாடுதே
பிரேமை தரும் மலர் காமனுடன்
ஒருநாள் மகிழ்ந்தால் சுகங்காணுமே (யோ)

இயற்றியவர் : பாடியவர் :

தஞ்சை ராமையாதாஸ் பி. ஜி. கிருஷ்ணவேணி
(ஜிக்கி)

## மேனகா

அதுவேண்டா(ம்) இது வேண்டா(ம்)
யாருக்கு(ம்) நீ பயந்திடவேண்டா(ம்)
இனி நல்லது கெட்டது எதும் வேண்டா(ம்)
ஜோராய்—இருக்கான் டம்பாச்சாரி
வீட்டில் பூவாவும் லாட்டரிங்க.
பகல்வேஷம் யாவுமே பாட்டரிங்க
பாருங்க தொப்பி போட்டால் உடனே
மறையும்லூசா ஆயிடுங்க. (அது)
நம்பரமாதிரி பொய் சொன்னுதான்
வியாபாரங்களும் ஜோராகும்
வியாபாரங்களும் ஜோராகும்.
இது உண்மையிலோர்
பொன்மொழிதாங்க
உலகமும் நம்மை வெல்லாது (அது)



இயற்றியவர் : தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர் : ஜிக்கி

**மேனகா**



கண்ணுன என்ராஜா நீ வாராய்
கலையே வெண்ணிலவோடு நீ வாராய்
(கண்ணுன)
என் ஆசைக் கண்ணுன
கண்ணு உன்னுலே
ஏங்கிடு(ம்) நிலையிலே ஏகாங்கி போலே
வாழ்வதோ உன் பண்பு-
பண்பிலோர் சுகம் அன்பு
வளரு(ம்) பிரேமையு(ம்) ஜோரய்-
வாராய் கண்ணு நேராய் (கண்ணு)
இந்நாளே-நன்னுளே-நீ உதயஜோதி
எழிலுடன் கண்ணிலே ஆனந்தமின்னலா(ய்)
மலரு(ம்) பூவிதழோடு வளரு(ம்) தேனிசைவண்டே
அந்தநாள் வந்தால்- ஆனந்தமாகுதே (கண்ணு)

இயற்றியவர் : தஞ்சை ராமையாதாஸ்

பாடியவர் : ஜிக்கி

**மேனகா**

உலாவுதே ஜோராய்-புல்புல் பாராய்
இது உலாவுதே ஜோராய்-புல்புல் பாராய்



பூவில் ரம்பையே நானே-
புதுமை காணுவேனே
வண்டு சூழ்ந்திடு(ம்) வேளை
மதுவேந்து(ம்) பூபோலே
இனி யவ்வனத்திலு(ம்) இது
இவ்வனத்திலு(ம்) (உலா)
வசந்த தேன்மலர் போலே-
என் நிலையை இழந்தேனே
இனி ஆவலாகுதே-
குயில்கூவி ஏங்குதே (உலா)

இபற்றியவர் : எஸ். எம், ஸந்தானம்

பாடியவர்கள் : சீர்காழி கோவிந்த ராஜன் & ராணி

**பீதாம்பரம் & சீதா**

பீதா: நாடகம்-ஆடலாம்-மகாநாடகம்-டகம்-டகம்-டகம்.
நாடகம்-ஆடலாம்-மகாநாடகம்-மறுநாடகம்-நல்ல நாடகம்



சீதா: பேர்வந்திடுதா—நமக்கு
பேர்வந்திடுதா—ஓடலூரிப்பேர் வந்திடுதா
பீதா: ஆ! பேருன்னுபேரா?
கோரமானபேரு! ஓஹோன்னு பேரு!
ஓடிவாடா—ஏராஜா-ஓடிவாடா—மதிவாணு
ஆடஆட—பாடபாட— கட்டுக்கடங்காது
நம்ம பேரே
கம்—கம்—நாடகம்—ஆடலாம்—
மகாநாடகம் மறுநாடகம் நல்ல நாடகம்.
ஷோக்கிலே—நாசூக்கிலே—இனி நீயே—
நாடகத்தின் வெகுமதி நீயே
அத்தனை கண்கள் உன்மீதே
சீதா: என்குரல் பொறக்கேறி— தொண்டை எழாது—
புத்தி செழிக்கச் செய்யணுன்னு
ஜனம்—புத்தி செழிக்கச் செய்யணுன்னு
செய்யணுன்னு நீயே—ஓ! நகைச்சுவை நடராஜா
பீதா: தாங்கிடதத்தத்தாம் தாங்கிடத்தாம்.
பீ & சீ: பாடினது பாட்டே நாம் ஆடினதே ஆட்டம்
நம்கொள்கையே லோகத்துக்கு நகைச்சுவை
தோட்டம்
ஏய்!—கம்—கம்—நாடகம்—ஆடலாம்—மகாநாடகம்—
மறுநாடகம்-நல்ல நாடகம்—நாடகம்.

இயற்றியவர்: பாடியவர்:

**தஞ்சை ராமையாதாஸ் சீர்காழி கோவிந்தராஜன்**

**பின்னணி**

மலையசைந்தாலும் நீயே-அம்மா!
மனந்தளராதே தாயே—
மாயா விகாரம் நிறைந்திடும் உலகில் மதியை இழக்காதே
வாழ்வினிலே-ஏ—ஏ—
வாழ்வினிலே—நீ செய்த பாபமிதே
நீயே உணர்வாயே
வானும் மதியும் தானுகக்குறையும்
நிலைமையை அறிவாயே (மலை)
சதியான உலகை சதமாய் நீ
எண்ணி மதியே மாறுவதா
விதி லீலையினல் பலியானதினலே
வீணே மயங்குவதா
பதிகௌரவமெல்லாம் ஏனோ மறந்தாய்
மனமே திருந்தாதா? (மலை)



# நடிக-நடிகைகள்

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. என். டி. ராமராவ் | .... | மோகன் |
| ,, அமர்நாத் | ... | ஆனந்த் |
| ,, ரேலங்கி | ... | பீதாம்பரம் |
| ,, 'வில்லன்' ஆர். நாகேஸ்வரராவ் | | தயாநிதி |
| ,, துரைசாமி | ... | கங்காதரன் |
| ,, ராவுலபல்லி | ... | திகம்பர் |
| ,, நாராயணராவ் | ... | கவி |
| ஸ்ரீமதி. ராஜசுலோசனா | .... | மேனகா |
| ,, (சௌகார்) ஜானகி | ... | லலிதா |
| ,, லக்ஷ்மிராஜ்யம் | ... | சாந்தம்மா |
| ,, சூர்யகாந்தம் | ... | காந்தம்மா |
| ,, சந்திரகுமாரி | .... | சாவித்திரி |
| ,, புஷ்பலதா | .... | சீதா |

மற்றும் பலர் நடித்தது.

**பின்னணி பாடியவர்கள் :**

**கண்டசாலா, சீர்காழி கோவிந்தராஜன்,**

**பி. லீலா, ஜிக்கி, ராணி.**

| | | |
|---|---|---|
| தயாரிப்பு | .. | கே. பாஸ்கர் ராவ் |
| கதை | ... | சமுத்ராலா, ராவூரி |
| வசனம் | ... | எஸ். எம். ஸந்தானம் |
| பாடல்கள் | .... | தஞ்சை ராமையாதாஸ்<br>எஸ். எம். ஸந்தானம் |
| சங்கீத டைரக்ஷன் | .... | கண்டசாலா |
| ஒளிப்பதிவு | .. | கமால் கோஷ் |
| ஒலிப்பதிவு | ... | பி. வி. கோட்டீஸ்வர் ராவ் |
| எடிட்டிங் | .... | எம். வி. ராஜன் |
| ஆர்ட் | .. | ஸி. எச். இ. பிரஸாத் |
| மேக்கப் | ... | வெங்கடேஸ்வரலு |
| நடனம் | ... | வெம்பட்டி |
| ஸ்டில்ஸ் | .. | சத்யம் (ஜேஹிந்த் ஸ்டூடியோ) |
| ஸ்டூடியோ | .. | நரசு, பரணி |
| ஜெனரல் மானேஜர் | .... | எம். ஆர். ஜயராம் |
| அஸோஸியேட் டைரக்டர் | .. | மானுபுரம் அப்பாராவ் |
| வசன டைரக்ஷன் | .. | எஸ். எம். ஸந்தானம் |
| டைரக்ஷன் | .. | **பாஸ்கர் ராவ்** |

வெஸ்ட்ரக்ஸ் ஒலிப்பதிவு முறையில்
பதிவு செய்யப்பட்டது

## இப்படத்தின் பாடல்களை
## ஹிஸ்மாஸ்டர்ஸ் வாய்ஸ், கொலம்பியா
## இசைத்தட்டுகளில் கேளுங்கள்

எவரெடி அச்சகம், சென்னை-17